கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண்.51/2017

19.10.2022

பெயர்- ராதாகிருஷ்ணன்

வா.சா.1

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 1,2 வாதிகள் மற்றும் 4,5 வாதிகள் என்னுடன் பிறந்த சகோதர சகோதரிகள் என்றால் சரிதான். நான் ஏற்கனவே நடந்த குறுக்குவிசாரணையில் பி.ஏ., டி.கெச்.கெச்.ஏ., படித்துள்ளேன் என்று சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். நான் அரசுவேலை பார்த்தேனா என்றால் இல்லை. இதர வாதிகளும் நன்கு படித்தவர்கள் என்றால் சரிதான். எனது தந்தை என்ன படித்துள்ளார் என்றால் 8ம் வகுப்புவரை படித்துள்ளார்.

2. எனது அப்பா மிகவும் நாணயமானவர் என்றால் சரிதான். எனது தந்தை யாரையும் ஏமாற்றவும் மாட்டார், யாரிடமும் ஏமாறவும் மாட்டார் என்றால் யாரையும் ஏமாற்றமாட்டார். யாரிடமும் ஏமாந்ததாக எனது தந்தை என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் ஞாபகமில்லை. பொதுவாக, அதிகார முகவர் ஆவணம் நம்பிக்கைக்குரியவர் மற்றும் நெருங்கிய பழக்கமுடையவர்கள் பெயரில்தான் எழுதமுடியும் என்றால் அவ்வாறு இல்லை.

3. பொதுவாக நம்பிக்கைக்குரியவரும், நெருங்கிய

பழக்கமுடையவரும்தான் முதல்வருக்கு நேர்மையாக இருப்பார்கள் என்ற அடிப்படையில் பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுக்கப்படும் என்றால் அவ்வாறு இல்லை. எனது அப்பா 20.11.1995ம் தேதியன்று வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி பொது அதிகார ஆவணம், 1ம் பிரதிவாதிக்கு நம்பிக்கைக்குரியவர், பழக்கமுடையவர் என்ற அடிப்படையில் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. வேறு எதன் அடிப்படையில் அதிகார முகவர் ஆவணம் எழுதிக்கொடுக்கப்படும் என்றால் எனக்குத் தெரியாது. எனவே 20.11.1995ம் தேதியன்று வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி பொது அதிகார ஆவணம், 1ம்பிரதிவாதிக்கு, எனது தந்தை எதன்அடிப்படையில் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ-3 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்ற நிலையில், அதனை எழுதிக்கொடுத்ததில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

5. வா.சா.ஆ.3-ன் அசலினை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம், எனது தந்தை 20.11.1995ல் 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அசல் என்று சொன்னால் சரிதான். (ஆவணத்தை பார்வையிட்டு சாட்சி கூறினார்).அந்த அசல் ஆவணமான பொது அதிகார முகவர் ஆவணம் பி.வா.சா.ஆ.2-ஆக குறியீடு செய்ப்படுகிறது) என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கையெழுத்து எனது தந்தையின் கையெழுத்து என்றால் சரிதான்.

6. எனது தந்தை தமிழில் மு.சீனிவாசன் என்று கையெழுத்து செய்வதுதான் வழக்கம் என்றால் அவர் தமிழிலும் கையெழுத்து செய்வார், ஆங்கிலத்திலும் கையெழுத்து செய்வார், பி.வா.சா.ஆ.2ல் தமிழில் கையெழுத்து செய்துள்ளார். இந்த வழக்கில் 27.07.2021ல் எனது தரப்பில் சாட்சியம் அளிக்க வாய்தா ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. 10.02.2022ல் நான் சாட்சியம் அளிப்பதற்கு இறுதி வாய்ப்பு வழங்கப்பட்டு உத்தரவிடப்பட்டிருந்தது என்றால் எனக்கு அது பற்றி ஞாபகமில்லை.

7. 10.02.2022ல் 1,2 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட கிரைய இரசீதுகளை பார்வையிட நீதிமன்ற அனுமதிகோரி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கிரைய இரசீது குறித்து 1,2 பிரதிவாதிகளால் 08.04.2021ல் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையிலேயே குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். 08.04.2021ல் கிரைய இரசீது குறித்து நான் தெரிந்துகொண்ட பின்பு மேற்படி இரசீதினை நீதிமன்றத்தில் 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்ய என்னால் அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

8, 22.02.2020ல் 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையுடன் மேற்படி கிரைய இரசீது தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். 22.02.2020ல் தாக்கல் செய்யப்பட்ட கிரைய இரசீதினை பார்வையிட 10.02.2022 அன்றுதான்

என்னால் குறிப்பாணை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 10.08.2022ல்தான் நீதிமன்றத்தில் என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

9. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணமான 03.03.2015ம் தேதியிட்ட கிஸ்தி இரசீதில் எனது தந்தை பெயர் ஸ்ரீனிவாசன் என குறிப்பிடப்பட்டுள்ளது வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் இல்லை. மேற்படி இரசீது ஏற்பட்ட காலத்தில் எனது தந்தை பெயரில் பட்டா இல்லை என்று சொன்னால் பட்டா இருந்ததால்தான் இரசீது அவர் பெயரில் கொடுக்கப்பட்டது. 03,03,2015ல் பட்டா எனது தந்தை பெயரில் இருந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. 25,11,2014லேயே பட்டா 1,2 பிரதிவாதிகள் பெயரில் மாற்றப்பட்டது என்று சொன்னால் எனக்குத் தெரியாது. எனது தந்தை இறந்தது 06,08,2006என்றால் சரிதான். மேற்படி அவரது இறப்பை 16.08.2006ல்தான் பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது தந்தை இறப்புச் சான்றிதழ் 11.08.2015ல்தான் இறப்புச் சான்றிதழ் நாங்கள் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான்.

11. எனது தந்தை 2006ல் இறந்து 2015வரை இறப்புச் சான்றிதழ் கைவசம் பெறப்படாமைக்கு குறிப்பிட்டு காரணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. 11,08,2015 என இறப்புச் சான்றிதழில் தேதி குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் அதில் கையெழுத்து செய்யப்பட்டபோது வருடம் குறிப்பிட்டு கையெழுத்து செய்யப்படவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளனர் ஆனால் தெளிவாகத் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணம் எனது தந்தையின் வாரிசு

சான்றிதழ் என்றால் சரிதான். எனது தந்தையின் இறப்புச் சான்றிதழிலும், வாரிசுச் சான்றிதழிலும் எனது தந்தை பெயர் சீனிவாசன் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ.2 கிஸ்தி இரசீது எனது தந்தை பெயரில் மனு கொடுத்து பெறப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக 02.11.2016ல்தான் வில்லங்கச் சான்றிதழ் பெற்று பார்வையிட்டோம் என்றால் சரிதான். எனது தந்தை இறந்து 10 வருடங்கள் கழித்து வில்லங்கச் சான்றிதழ் எடுத்து பார்த்ததற்கு குறிப்பிட்டு காரணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை.

13. 02.07.2014ம் தேதியன்று எனது தந்தை கொடுத்த அதிகார முகவர் ஆவணமான வா.சா.ஆ.3ன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி தனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் வா.சா.ஆ.7ன் அடிப்படையில் கிரையம் ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணம் அசல் ஆவணமா என்றால் இல்லை, கைநகல்தான். வா.சா.ஆ.8ல் கையெழுத்து செய்துள்ள வாதிகளாகிய நாங்கள் அனைவரும் ஒரே கருப்பு பேனாவில் ஒரே இடத்தில் வைத்து கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான்.

14. அவ்வாறு வா.சா.ஆ.8னை எந்த இடத்தில் வைத்து கையெழுத்து செய்தோம் என்றால் அருப்புக்கோட்டையில் வைத்து கையெழுத்து செய்தோம். வா.சா.ஆ.8 மனுவினை இராமநாதபுரம் மாவட்ட பதிவாளருக்கு நேரில் சென்று கொடுத்தோமா அல்லது தபாலில் அனுப்பி வைத்தோமா என்றால் நேரில் சென்று கொடுத்தோம். நாங்கள் ஐந்துபேரும் நேரில் சென்று கொடுத்தோமா

என்றால் ஆமாம். (பின்னர் சாட்சி நான்மட்டும்தான் கொடுத்தேன் என்று கூறினார்). வா.சா.ஆ.8 மனுவில் கண்ட தேதி 23.01.2017 என்றால் சரிதான்.

15. வா.சா.ஆ.8 மனுவிற்கு வா.சா.ஆ.9 பதில் எனக்கு தபால் மூலம்தான் கிடைக்கப் பெற்றது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 தபாலில் வந்ததற்கான அஞ்சல் கவரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது கைவசம் வைத்திருக்கிறார். பொதுவாக அரசு அலுவலகங்களில் மனுகொடுத்தால் மனுவினை பரிசீலனை செய்து விசாரணை செய்யப்பட்டுதான் பதில் கொடுக்கப்படும் என்றால் சரிதான்.

16. அந்த மனு விசாரணைக்காக 1 மாதகாலமாகவும் இருக்கலாம், 1 வருடமாகவும் இருக்கலாம் என்றால் எனக்கு தெரியாது. நான் மனு கொடுத்த தேதியான 23.01.2017லேயே எனக்கு பதில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8ல் 1ம் வாதி ராமமூர்த்திதான் முதல்மனுதாரர் என்றால் சரிதான். நான் 3ம் மனுதாரர் என்றால் சரிதான்.

17. வா.சா.ஆ.9 பதில் கடிதம் என்னுடைய திண்டுக்கல் முகவரிக்குத்தான் அனுப்பிவைக்கப்பட்டது என்றால் ஆமாம், எனது காந்திகிராம முகவரிக்கு அனுப்பப்பட்டது. இராமநாதபுரம் மாவட்ட பதிவாளரிடமிருந்து முதல் மனுதாரரான ராமமூர்த்தி பெயருக்கு பதில் அனுப்பப்படாமல் என் பெயருக்கு பதில் அனுப்பப்பட்டதற்கு குறிப்பிட்ட காரணம் ஏதும் உள்ளதா என்றால் நான் நேரில் சென்று கொடுத்ததால் என் பெயருக்கு அனுப்பப்பட்டது.

18. நான் என் பெயருக்கு, பதில் அனுப்பச் சொல்லி கோரிக்கை வைத்ததால் என் பெயருக்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. வா.சா.ஆ.9ல் உள்ள பெறுநர் முகவரியில் கண்ட முகவரியைத்தான் தாவா வழக்கில் எனது முகவரியாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நான் திண்டுக்கல் காந்திகிராமத்தில்தான் நான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் இல்லை, நான் அங்கு வேலை பார்த்ததால் அங்கு பணியாளர் குடியிருப்பு வழங்கப்பட்டதால் அங்கு குடியிருந்தேன், அதன்பின்பு அருப்புக்கோட்டைக்கு வந்துவிட்டேன், அங்கு நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் நிர்வாக அலுவலராக 2013 ஜூன்வரை பணியாற்றினேன்.

19. நான் ஓய்வு பெற்றவுடன் அருப்புக்கோட்டைக்கு வந்துவிட்டேனா என்றால் இல்லை, 2018 செப்டம்பர் மாதம்தான் அருப்புக்கோட்டைக்கு வந்தேன். தற்போதும் அருப்புக்கோட்டையில் நான் நிரந்தரமாக குடியிருக்கவில்லை என்றாலும், மதுரையில்தான் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல, நான் அருப்புக்கோட்டையில்தான் குடியிருக்கிறேன். நான் வழக்கிற்காக பொய்யாக அருப்புக்கோட்டையில் குடியிருப்பதாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வா.சா.ஆ.10ன் அடிப்படையில் 20,09,2017 தாவா சொத்தினை கிரையம் வாங்கிக்கொண்டார் என்றால் சரிதான்.

20. 3ம் பிரதிவாதியால் 20,10,2017ல் தனது மனைவி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட தானப்பத்திரம்தான் வா.சா.ஆ.11 என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கச்

சொல்லி 06.09.2019ல் என்னால் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 20.09.2017ல் 3,4 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட கிரையம் குறித்து அப்போதே எனக்குத் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.15 வரையான ஆவணங்கள் திருச்சுழி நிலவள வங்கியில் ஏற்பட்ட பதிவு அடமான கடன்பத்திரங்களின் இணையதள நகல் என்றால் சார்பதிவாளர் சான்றிட்ட இணயதள நகல் ஆகும்.

21. பொதுவாக இணையதள நகல் தாக்கல் செய்யும்போது முதல் பக்கத்தில் எந்த தேதியில் விண்ணப்பம் செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.15வரையான ஆவணங்களில் முதல் பக்கத்தில் இணையதள நகல் விண்ணப்பித்த தேதி இல்லை என்று சொன்னால் சாட்சி ஆவணங்களை பார்வைிட்டு இல்லை என்று கூறினார்.

22. நான் இணையதள நகலுக்கு பத்திரம் வாங்கிக்கொடுத்த தேதி 29.03.2019 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக இணையதள நகலுக்கு சார்பதிவாளரிடம் சான்று பெறவேண்டியதில்லை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ-15 வரையான ஆவணங்கள் தாவா சொத்திற்குரியது இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பிறந்த தேதி குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் 14.11.1958 ஆகும். 24,06,1970ல் நான் 18 வயது பூர்த்தி அடைந்துவிட்டேன் என்றால் இல்லை.

23. தாவா சொத்து எனது தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், அவர் பெயரில் ஏற்பட்ட கிரையச் சொத்து என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-12 முதல் 15 வரையான அடைமான கடன்பத்திரங்களில் அனைத்து 1ம் வாதியும், 3ம் வாதியான என்னையும் தரப்பினராக காண்பிக்க என்ன காரணம் என்றால் தெரியாது. இதுகுறித்து எனது தந்தையிடம் பாத்தியமில்லாத சொத்திற்கு ஏன் எங்களை தரப்பினராக சேர்த்தீர்கள் என்றுநான் கேட்டேனா என்றால் இல்லை.

24. எனது தந்தையும் இதுகுறித்து எங்களிடம் சொல்லியதில்லை என்றால் சரிதான். அடமானக் கடன் ஆவணங்கள் குறித்து முதல்முறையாக நாங்கள் எப்போது தெரிந்துகொண்டோம் என்றால் நாங்கள் வில்லங்கம்போட்டு பார்த்தபோது தெரிந்துகொண்டோம். எந்த தேதி என்றால் சாட்சி யோசித்து 2019ல் தெரியும் என்று கூறினார். அவ்வாறு 2019ல் நான் வில்லங்கம்போட்டு பார்த்ததற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

25. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ஆவணத்தில் 01.01.1987 முதல் 01,11,2016 வரை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் வில்லங்கம் பார்த்ததில் அடமானப் பத்திரங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்து 2 வருட காலத்திற்குப் பின்புதான் சொத்தில் இன்னும் வில்லங்கம் உள்ளதா என்று நான் மனு செய்து பார்த்தேன் என்றால் சரிதான்.

26. 2019ல் நான் 1987வருடம் என்ற நிலையில் முன்தேதிக்கு இணையத்தில் வில்லங்கம் பெற முடியாது என்பதால் சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கம் கேட்டு எழுதிப்பெற்றேன் என்றால் இணையதளத்திலும், நேரிலும் பெற்றேன். அவ்வாறு நேரிலும், இணையதளத்திலும் நான் 2019ம் ஆண்டு பெற்ற வில்லங்கத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

27. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.16 ஆவணமான 10,05,2002ம் தேதியிட்ட திருச்சுழி கூட்டுறவு நிலவள வங்கியால் கடனை திரும்பச் செலுத்தக்கோரி அனுப்பபட்ட அறிவிப்பு எனக்கு எப்போது கிடைக்கப்பெற்றது என்றால் இன்றைய தேதியிலிருந்து 2 வருடங்களுக்கு முன்பு கிடைக்கப்பெற்றது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.16 இரசீதில் வங்கி முத்திரை எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

28. 10,05,2002 தேதியிட்டு கடிதம் கிடைக்கப்பெறும்போது எனது தந்தை உயிருடன் இருந்தார் என்றால் 2002ல் எனது அப்பா உயிருடன் இருந்தார். வா.சா.ஆ-16 அவர் பெயரிலானதும் என்றும் அவரால் பெறப்பட்டது என்றாலும் சரிதான். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு வா.சா.ஆ.16 கடிதத்தை எனக்கு யார் கொடுத்தார்கள் என்றால் எனது வீட்டில் இருந்ததை நான் தேடி பார்த்து எடுத்துக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.16ல் தனி அலுவலர்/செயலாளர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 13,05என மட்டும் குறிப்பிடப்பட்டு வருடம் -குறிபிடப்படவில்லை என்றால் சரிதான்.

29. திருச்சுழி கூட்டுறவு நிலவள வங்கி கடந்த 20 ஆண்டுகாலமாக நலிவடைந்த வங்கியாக பெயரளவில் இயங்கி வருகிறது என்றால் அது எனக்குத் தெரியாது. மேற்படி வங்கி ரெட்டியபட்டியில் உள்ளது என்றால் சரிதான். நான் அங்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். கடைசியாக எப்போது சென்றேன் என்றால் 14.09.2021ல் சென்றேன். நான் எதற்காக வங்கிக்கு சென்றேன் என்றால் கடனில்லாச் சான்று பெறுவதற்கு சென்றேன்.

30. கடனை செலுத்தச்சொல்லி தந்தைக்கு 2002லேயே ஆவணம் இருந்த நிலையில் 2019ல் தெரியவரப்பெற்ற நிலையில், நான் 2021ம் வருடத்தில் அங்கு சென்றதற்கு குறிப்பிட்டு காரணம் ஏதும் உள்ளதா என்றால் எதுவும் இல்லை. 2002ல் கடனை செலுத்தக்கேட்டு அறிவிப்பு வரப்பெற்ற நிலையில் கடன் எப்போது செலுத்தப்பட்டது என்றால் 2006ல் அரசு தள்ளுபடியில் தீர்ந்துவிட்டதாக வா.சா.ஆ.19ல் குறிப்பிடப்பட்டிருந்தது.

31. வா.சா.ஆ.19 ஆவணம் நான் நீதிமன்றத்தில் சான்றாவணமாக தாக்கல் செய்யவேண்டி வங்கியை அணுகி பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.16ன் கடன் என்பது வா.சா.ஆ.12 முதல் 15வரை ஏற்பட்ட கடனை செலுத்தச் சொல்லி வந்த அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ.12 முதல் 15வரையான ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்ற நிலையில் கடன் தள்ளுபடி செய்யப்பட்டாலும், அடமானக் கடன் தீர்ந்தது என்று இரசீது ஏற்படுத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கவேண்டும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

32. அடமானக் கடன் தீர்ந்ததாக சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிந்து அது சம்பந்தமான இரசீது எதுவும் தாக்கல் செய்தது சம்பந்தமாக எனக்குத் தெரியுமா என்றால் அவ்வாறு எந்த இரசீதும் தாக்கல் செய்யவில்லை. நான் 14,09,2021ல் திருச்சுழி கூட்டுறவு நில வங்கியில் செயலாளர் வசம் அடமானக் கடன் தீர்ந்தது குறித்து சார்பதிவாளர் அலுவலகத்தில் இரசீது போடவேண்டும் என்ற தகவல் அவர் என்னிடம் சொன்னாரா என்றாலும், இது குறித்து நான் கேட்டேனா என்றாலும் இல்லை.

33. அவ்வாறு அடமானக் கடன் தீர்ந்ததாக நான் இரசீது சார்பதிவாளர் அலுவலகத்தில்தாக்கல் செய்யப்படாமல் வங்கியில் கடனில்லாச் சான்று கோரி அவர்களால் வழங்கப்பட்டது எனது அறிவுறுத்தலின்பேரில் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பொதுவாக அடமானக் கடன் இருந்து அது தீர்ந்தாலும் வில்லங்கச்சான்றிதழில் அதன் குறிப்பு இருக்கும் என்றால் தீர்ந்துவிட்டால் இருக்காது. வா.சா.ஆ.17 மற்றும் வா.சா.ஆ.18 கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செலுத்தப்பட்ட கடன் இரசீதுகள் என்று சொன்னால் சரிதான்.

34. மேற்படி இரண்டு இரசீதுகளும் 20.06.2002ல் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.17ல் எனது தந்தையின் உறுப்பினர் எண்ணாக 528 என்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ஆவணத்தில் எனது தந்தையின் பெயர் மு.சீனிவாசகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.18 ஆவணத்தில் அதே வங்கி அதே தேதியில் வழங்கப்பட்ட இரசீதில் உறுப்பினர் எண் 520 என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இரசீது கார்பன் காப்பியாகும், உறுப்பிணர் எண் பேனாவில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறுதலாக எழுதப்பட்டிருக்கலாம்.

35. பொதுவாக வங்கியில் கடன் தொகை செலுத்தினால் செலுத்தும் நபருக்கு அசல் இரசீதினை கொடுப்பதுதான் வழக்கம் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.17, வா.சா.ஆ.18 ஆவணம் எனக்கு எப்போது கிடைக்கப்பெற்றது என்றால் 2 வருடத்திற்கு முன்பு வா.சா.ஆ.16 கிடைக்கப்பெற்றபோது கிடைக்கப் பெற்றது. வா.சா.ஆ.17, 18 ஆவணங்கள் ஒரே தேதியில் அடுத்தடுத்த இரசீதுகளில் ஏற்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.17ல் தேதி 20.06.2002 எனவும், வா.சா.ஆ.18ல் தேதி 20,06.02 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

36. கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி எந்த ஊரில் உள்ளது என்றால் தும்முசின்னம்பட்டியில் உள்ளது. தும்முசின்னம்பட்டியில் உள்ள வங்கிக்கு நான் சென்றுள்ளேனா என்றால் இல்லை, சென்றதில்லை. நான் சொல்வதுபோது தும்முசின்னம்பட்டியில் கிருஷ்ணாபுரம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி எதுவும் இல்லை என்றால் நான் கிருஷ்ணாபுரமும், தும்முசின்னம்பட்டியும் ஒன்று என்றுதான் கேள்விபட்டேன். கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சுத்தமடத்தில்தான் உள்ளது என்றால் ஆமாம், நான்தான் மாற்றி சொல்லிவிட்டேன்.

37. தாவா சொத்து உள்ள ஊர் திருமலைபுரம் என்றால் சரிதான். திருமலைபுரம், சுத்தமடம், கிருஷ்ணாபுரம் ஆகியவை ஒரே

பஞ்சாயத்தில் கட்டுப்பட்ட ஊர்கள் என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்தை எந்தவித இடையூறுமின்றி தொடர்ச்சியாக அனுபவித்து வருகிறோம் என்பதுதான் எனது வழக்கு என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் யாருடைய நிலமாக இருந்து தற்போது யாருடைய நிலமாக உள்ளது என்றால் கிழக்கு பகுதி இராமநாதபுரம் எல்கையில் வருகிறது.

38. இராமநாதபுரம் எல்கையில் யாரது சொத்து உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்தின் கிழக்கே உள்ள சொத்தில் மரங்கள் உள்ளதா, காலியிடமாக உள்ளதா என்ற விபரம் எனக்குத் தெரியாது என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள கமுதி எல்கையில் உள்ள சொத்துக்களை எஸ்பிகே நிறுவனர் செய்யாத்துரை கிரையம் பெற்று அதில் 20 ஆண்டுகளுக்கு முன்பே யூக்களிப்பிடஸ் மரங்கள் நட்டு அது தற்போது மரங்கள் பெரிதாக அவர் அனுபவத்தில் உள்ளது என்றால் தெரியாது.

39. அந்த நிலத்திற்கும் கிழக்கே தொப்பலாக்கரை கிராமத்திற்குச் செல்லும் கிராமச் சாலை செல்கிறது என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு மேற்கே யாருடைய நிலமாக இருந்து தற்போது யாருடைய நிலமாக உள்ளது என்றால் பச்ஸ்சமால்த்தேவர் நிலமாக இருந்து தற்போது யார் நிலம் என்று எனக்குத் தெரியாது. பச்சைமால்த்தேவர் நிலம் 10 வருடங்களுக்கு முன்பு மனையிடமாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

40. பச்சைமால்தேவர் நிலத்திற்கு மேற்கே திருமலைபுரம் கிராமத்திற்கு செல்லும் கிராமசாலை உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு தாவா சொத்து இரண்டு கிராமங்களுக்குச் செல்லும்

சாலைகளின் நடுவே உள்ள மதிப்பு மிக்க சொத்து என்றால் இரண்டு சாலைகளுக்கு நடுவே உள்ளது, மதிப்பு மிக்க சொத்து என்று எனக்குத் தெரியாது. எங்களது சொத்திலிருந்து வடக்குப் பக்கம் 200 அடி தொலைவில், அருப்புக்கோட்டையிலிருந்து- சாயல்குடி செல்லும் மெயின்ரோடு செல்கிறது என்றால் இருக்கலாம்.

41. தாவா சொத்திற்கு கடைசியாக எப்போது சென்றேன் என்றால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு சென்றேன். தாவா சொத்தை 2017ல்கிரையம் பெற்ற காலத்திலிருந்து 3,4 பிரதிவாதிகள் அனுபவத்தில்தான் இருந்துவருகிறது என்றால் இல்லை. நான் தாவா சொத்திற்கு சென்று 2வருடங்கள் ஆவதால் கடந்த ஆண்டு 3,4 பிரதிவாதிகள் என்ன பயிரிட்டார்கள் என்று எனக்கு நேரடியாகத்தெரியாது என்றால் தெரியாது.

42. கடந்த ஆண்டு 3,4 பிரதிவாதிகள் தாவா சொத்தான 10 ஏக்கர் 40 செண்ட் சொத்திலும் வெள்ளைச் சோளம் பயிரிட்டிருந்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. 2019ம் வருடத்தில் 3ம் பிரதிவாதி பாதி இடத்திலும், 4ம் பிரதிவாதி பாதி இடத்திலும் சோளம் பயிரிட்டிருந்தார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 101 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அடங்கல் பதிவேடு 2019ம் வருடத்திற்கான 1429ம் பசலிக்கு 3ம் பிரதிவாதிக்கும், 4ம் பிரதிவாதி அங்கையர்கன்னிக்கும் கொடுத்தது என்றால் கொடுத்திருக்கிறார்கள்.
43. 1430ம் பசலிக்கு 3ம் பிரதிவாதி பெயரில் உழுவடை செய்துவருவதாக பயிர் அடங்கல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் கொடுத்திருக்கிறார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் அந்த பயிர்

அடங்கலில் பேங்க் ஆப் இந்தியா, மண்டபசாலை என ஆங்கிலத்தில் முத்திரையிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகள் வங்கியில் பயிர்கடன் பெற்றதற்கு இடப்பட்ட முத்திரைதான் அந்த குறிப்புகள் என்று சொன்னால் தெரியாது. தாவா சொத்திற்கு நான் தாசில்தார் அலுவலகத்திலிருந்தும், கிராம நிர்வாக அலுவலகத்திலிருந்தும் எந்த பயிர் அடங்கல் இரசீதும் பெறவில்லை என்றால் பெற்றுள்ளேன்.

44. எந்த எந்த ஆண்டுக்கு இரசீது பெற்றுள்ளேன் என்றால் 1423 பசலி, 2013 மற்றும் 2014ம் ஆண்டிற்கு பெற்றுள்ளேன். 2013-2014க்கு பிறகு எந்த ஆண்டுக்கும் அடங்கல் இரசீது பெறப்படவில்லை என்றால் சரிதான். 2013-2014ற்கு பின்பு நான் தாவா சொத்தில் எந்த அனுபவத்திலும் இல்லை என்பதால் என்னால் அடங்கல் இரசீது பெறப்படவில்லை என்றால் அது தவறு. வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.15 வரையான ஆவணங்களில் எனது தகப்பனார் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான்.

45. வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13ல் ஆவணங்களில் எனது தந்தை செய்துள்ள கையெழுத்திற்கும், வா.சா.ஆ.14,15ல் உள்ள கையெழுத்தில் அடிக்கோடு போடப்பட்டுள்ளதால் இரண்டு கையெழுத்துக்களும் வேறு வேறு கையெழுத்துக்கள் என்றால் இல்லை. இரண்டும் ஒரே கையெழுத்துதான். பொதுவாக சொத்தினை கிரையம் பெறும்போது 30 ஆண்டுகள் வில்லங்கம் பார்த்து கிரையம் பெறுவது நல்லெண்ணக் கிரையம் என்றால் சரிதான்.

46. 3,4 பிரதிவாதிகள் 1987லிருந்து இணையத்தின் மூலம் வில்லங்கம் பார்த்துதான் தாவா சொத்தினை நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் வாங்கினார்கள் என்றால், இல்லை. 3,4 பிரதிவாதிகள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் தொப்பலாக்கரை கிராமத்தைச் சேர்ந்தவர்கள். 3, 4 பிரதிவாதிகள் தொப்பலாக்கரை கிராமத்தைச் சேர்நதவர்கள் என்பதாலும், தாவா சொத்தின் கிழக்கே உள்ள சொத்தினை அடுத்து தொப்பலாக்கரை செல்லும் சாலை உள்ளதால் 3,4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தின் அனுபவம் குறித்து நேரடியாகத் தெரியும் என்றால் எனக்குத் தெரியாது.

47. தாவா சொத்தை 3,4 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய பின்பு அவர்கள் குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. கடந்த ஜூன் மாதம் 3ம் பிரதிவாதிக்கு, 4ம் பிரதிவாதி சிறுநீரகம் தானம் செய்து இருவரும் நடமாட முடியாத நிலையில் ஓய்வில் உள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்து விலை மதிக்கமுடியாத சொத்து என்பதால் பவர் பத்திரம் ஏற்பட்ட காலத்திற்கு பின்பு சட்டத்தில் ஏற்பட்ட மாற்றத்தை எனக்கு சாதகமாக பயன்படுத்தி பேராசையின் காரணமாக தாவா வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

48. வா.சா.ஆ.2ஆன 03.03.2015தேதியிட்ட தீர்வை இரசீது செலுத்தப்படுவதற்கு முன்பே 25,11,2014ல் தாவா சொத்தின் பட்டா 714ல் 1,2 பிரதிவாதிகள் பெயர் இருந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சொத்தில் நான் எப்போதும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்காமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

மட்டும்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

49. 3,4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரையமும், தான செட்டில்மெண்ட் ஆவணமும் நல்லெண்ணத்தின்பால் ஏற்பட்டதால் அதனை ரத்து செய்ய சட்டத்தில் வழிவகை இல்லை என்று சொன்னால் இல்லை, ரத்து செய்யலாம். தாவாசொத்தின் அமைப்புகள் குறித்தோ, அனுபவம் குறித்தோ எனக்கு எதுவும் தெரியாததால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.